**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No. 48/2025 - PW-5**

| | |
|---|---|
| Name | திரு. ராஜா |
| Husband/Father Name | சண்முகம் |
| Village /Area | விண்டர்பேட்டை |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | எலக்டீரிஷியன் |
| Age | 44 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 10.02.2026.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரி என்னுடைய சித்தப்பா ஆவார். அ.த.சா.1. என்னுடைய அத்தை மகள். அ.த.சா.2 என்னுடைய சித்தப்பா மகன். சம்பவத்தைப்பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.ஆஜர் எதிரியின் சொந்த அண்ணன் மகன் சரவணன் என்ற நபருக்கு அடிப்பட்டதாக நான் கேள்வி பட்டேன். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது).**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை –**

02.11.2024ம் தேதி பகல் 14.00 மணியளவில் நானும் விண்டர்பேட்டையை சேர்ந்த மகேந்திரன் என்பவரும் அரக்கோணம் ராம்கோ பாலம் அடியில் நடந்து சென்ற போது அரக்கோணம் நகர காவல் ஆய்வாளர் எதிரி வெங்கடேசன் என்பவரை கைது செய்து விசாரித்து கொண்டிருந்த போது அவர் எந்த விதமான வற்புறுத்தலுமின்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை என் முன்னிலையிலும் சாட்சி மகேந்திரன் முன்னிலையிலும் பதிவு செய்ததாகவும் மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின்

அடிப்படையில் ஆஜர் எதிரி வெங்கடேசன் தன் இடுப்பின் பின் பக்கத்தில் மறைத்து வைத்திருந்த கத்தியை எங்கள் முன் ஆஜர் படுத்தியதை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி கொண்டதாகவும் மேற்படி ஆவணங்களில் அதற்கு சாட்சியாக நானும் மகேந்திரனும் கையொப்பம் செய்துவிட்டு எதிரியை காப்பாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>** இல்லை.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.02.10 17:39:42 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.